2012 ஏப்ரல் 24]

152—

வேளாண்மைக் கல்லூரி

***7923—திரு. சு. பவுன்ராஜ்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பூம்புகார் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிகவும் சோகத்தோடு சொல்கிறீர்கள்போல் தெரிகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ் அவர்கள்.*

திரு. சு. பவுன்ராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு ஒரு அரசுக் கலைக் கல்லூரியைக் கொடுத்தமைக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

என்னுடைய பூம்புகார் தொகுதி விவசாயத்தைச் சார்ந்த தொகுதி. அங்கேயிருக்கிற 25 சதவிகித மக்கள் விவசாயத்தை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஒப்பற்ற அரசு இரண்டாம் பசுமைப் புரட்சித் திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. விவசாயத்தை நம்பியிருக்கிற அந்தப் பகுதிக்கு ஒரு வேளாண்மைக் கல்லூரியை அமைத்துக் கொடுத்தால், மயிலாடுதுறை கோட்டத்தில் இருக்கிற பூம்புகார், மயிலாடுதுறை மற்றும் சீர்காழி ஆகிய 3 தொகுதிகளில் இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்கள் பயன்பெறுவதற்கு ஏதுவாக இருக்கும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனை மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று இந்தப் பகுதியிலே வேளாண்மைக் கல்லூரியை அமைத்துக் கொடுப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதிக்கு அருகிலேயுள்ள திருச்சி மாவட்டம், நாவலூர் குட்டப்பட்டில் ஒரு வேளாண்மைக் கல்லூரியும், ஒரு மகளிர் தோட்டக் கலைக் கல்லூரியும் மற்றும் குமுளூரில் ஒரு வேளாண் பொறியியல் கல்லூரியும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகளில் மட்டும் 180 இடங்கள் உள்ளன. வேளாண்மைப் பட்டப் படிப்பில் சேர விரும்பும் பூம்புகார் தொகுதியைச் சார்ந்த மாணவர்கள் தங்களுடைய தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள இக்கல்லூரிகளிலுள்ள 180 இடங்களையும் பயன்படுத்திக்கொள்ளலாம்.*

மேலும், நாகப்பட்டினம் மாவட்டம், சிக்கலில் இயங்கிவரும் வேளாண் அறிவியல் நிலையம், பூம்புகார் தொகுதி விவசாயிகளுக்குத் தொழில்நுட்ப விவரங்களையும் மற்றும் அவர்களுக்குத் தேவையான பயிற்சிகளையும் வழங்கி வருகிறது. ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்கள், இந்த ஆண்டு நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு 2 கலைக் கல்லூரிகளைக் கொடுத்திருக்கிறார்கள். மேலும், புதியதாக வேளாண்மைக் கல்லூரியைத் தொடங்க வேண்டுமென்றால், குறைந்தது 50 கோடி ரூபாய் நிதியும், 100 ஏக்கர் நிலமும் தேவைப்படுகின்றன. எனவே, அங்கு அவசியம் இருப்பின், வருகின்ற காலக்கட்டங்களில் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ் அவர்கள்.*

திரு. சு. பவுன்ராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 153, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*